REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 16உ சனி (29—1—55) ★ ★ வெளியூர்: தை 17உ ஞாயிறு (30—1—55) [இதழ் 195

பாம்பு கடிக்கு மருத்துவம் செய்பவர்—

பாம்பு கடித்தே இறந்த பரிதாபம்

கோழிக்கோடு, ஜன. 26—

கோட்டக்கல் சங்கர குருப் என்ற 80 வயது கிழவர் பாம்புகளைப் பழக்குவதிலும், பாம்பு கடிக்கு சிகிச்சை செய்வதிலும் நிபுணர். ஆனால், அவரே ஒரு பாம்பு கடியினால் இறந்துபட்டதாகத் தெரியவருகிறது.

தன் வீட்டையடுத்து கிணறு ஒன்று தோண்டப்படும் பொழுது பாம்பு ஒன்று இருப்பதைக் கண்ட அவர், அந்தப் பாம்பைப் பிடிக்க முயற்சித்துக்கொண்டிருக்கையில், அந்தப் பாம்பு இவரைத் தீண்டிவிட்டது. இவர் எப்படியோ பாம்பைப் பிடித்து பானையில் அடைத்துவிட்டார்; என்ருலும், பாம்புக்கடி அவரைக் கொன்றுவிட்டதாம்.

தோல் ஏற்றுமதியால் இந்தியாவிற்கு 25 கோடி ரூபாய் இலாபம்!

சென்னை ஏற்றுமதியால் மட்டும் ரூ. 24 கோடி கிடைக்கிறது

'இந்தியப் பேரரசு அளவுகடந்து சென்னையைச் சுரண்டுகிறது'

சென்னை கவர்னர் பிரகாசா வேடிக்கையாக வேதனையைக் குறிப்பிடுகிறர்!

"நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பதனிட்ட தோல்களிலிருந்து, இந்தியப் பேரரசு ஆண்டு ஒன்றுக்கு 25 கோடி ரூபாய்க்கு வெளிநாட்டு நாணயங்களைப் பெறுகின்றது. 24 கோடி ரூபாய்க்கு பதனிட்ட தோல்களை சென்னை மட்டுமே ஏற்றுமதி செய்வதால் கிடைக்கின்றன."

"இந்தியப் பேரரசு, எடுத்துக்கொள்ள வேண்டியபதற்குக் கூடுதலாக மாநிலங்களில் இருந்து எடுத்துக்கொள்ளும் அவலட்சணப் போக்கைக் கொண்டிருக்கிறது."

—இப்படி, மத்திய தோல் பதனிடும் ஆராய்ச்சிக் கழகத்தில் பேசிய சென்னை கவர்னர் சிரீபிரகாசா கூறியுள்ளார். பிற்பகுதியை அவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டாராம்.

அவர் மேலும் பேசும்பொழுது, தன்னுடைய இளமைப் பருவத்தில் சென்னையிலிருந்து குரோம் மிதியடிகளைத் தருவிப்பது வழக்கம் என்றும், அதிகப்படியான அளவில் தோல் ஏற்றுமதிக்கு உதவி செய்துவரும் இப்பகுதி மக்களில் 90 சத விகிதத்தினர் மிதியடி அணிந்துகொள்ளாமல் வெறும் காலுடன் நடக்கும் பழக்கம் கொண்டிருப்பது விடுகதையாக இருக்கிறது என்றும், சித்திரவதை செய்து பிரயாணிகளைக் கொல்வதில் இந்தியா சிறப்புப் பயிற்சி கொண்டிருக்கிறதோ என எண்ணுமாறு நிலைமை இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மு. கருணாநிதி உடல் நிலை

கடந்த பதினைந்து தினங்களுக்கு மேலாக, எழும்பூர் கண் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த கருணாநிதி அவர்கள் 26-ந் தேதி புதன் கிழமையன்று நோய் குணமாகி வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார். இன்னும் சிறிது நாட்களுக்கு 'அவுட்-பேஷிண்டா'க இருந்து சிகிச்சை பெற வேண்டுமென்றும், நல்ல ஓய்வு தேவையென்றும் டாக்டர் சொல்லியிருக்கிறர். நரம்புகளுக்கு அதிகம் வேலைதரக் கூடாதாகையால், நண்பர்களுடன் பேசுவதற்குக்கூட டாக்டரால் தடை செய்யப்பட்டிருக்கிறர்.

பணமுடிப்பு — அவருக்கு

ராஜ்கோட், ஜன. 29—

வருகிற திங்கட்கிழமையன்று, சௌராட்டிர மக்கள், புதிய அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபருக்கு ரூ. 3,11,111 கொண்ட பணமுடிப்பொன்றை அளிக்க இருக்கிறர்களாம்.

தலைப்பாகை இல்லையென்றல்!

தலைமுடியைப் போலீசார் கத்தரித்துவிடுகிறராம்!

அகமதாபாத், ஜன. 28—

சபர்காந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றில், ஒரு போலீஸ்காரர், அக்கிராமத்து மக்கள் தலைப்பாகை இல்லாமல் வெளியில் நடந்துசெல்லக் கூடாது என்று கூறியிருக்கிறர்.

தனது உத்தரவை மீறிச் செல்லுவோரை போலீஸ் நிலையத்திற்கு இழுத்துச் சென்று, அவர்கள் தலைமுடியை அலங்கோலமாகக் கத்தரித்து விடுகிறராம்.

மாலையில் வயல்களிலிருந்து வீடு திரும்பும் விவசாயிகள் இந்த வேதனைக்கு ஆளாகின்றனராம்!

இந்தோனேஷியாவுக்கு எதிரான நடவடிக்கை?

டச்சு நியூகினியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, ஏராளமான 'நேவல் ஏர் கிராப்ட்' அனுப்ப ஹாலந்து சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

செஞ்சீனவுக்கு ஐ. நா. அழைப்பு?

பார்மோசா பிரச்சினையின் எதிரொலி

சியாங் வசமிருக்கும் பார்மோசா தீவின் நிலைமை பற்றி விவாதிக்க ஐ நா. பாதுகாப்புக் குழுவின் கூட்டம் 31-ந் தேதி நடைபெற இருக்கிறது.

இந்தக் கூட்டத்தில், செஞ்சீனவும் கலந்து கொள்ள அழைப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்று வருவதாகவும், பிரிட்டன், அமெரிக்கா, நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் இது விஷயத்தில் தத்தம் சம்மதத்தைத் தெரிவித்து உடன்பாடு ஏற்பட்டிருப்பதால், மற்ற நாடுகளின் ஆதரவும் நிச்சயம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், சோவியத் யூனியனிலிருக்கும் பிரிட்டிஷ் தூதுவரான சர். ஹேட்டன் என்பவர், சோவியத் அயல் நாட்டமைச்சர் மாலட்டோவைச் சந்தித்து, ஐ. நா. குழு, தூரக்கிழக்கு நாடுகளின் நிலை பற்றி விவாதிக்க செஞ்சீனவுக்கு அழைப்பு அனுப்புமானல், அதனை ஏற்றுக்கொள்ளுமாறு, செஞ்சீனவை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளாராம்.

அனைத்து உணவுப் பொருட்களும் இன்றியமையாதவை!

காய், கிழங்கு, கம்பு, சோளம், நெல் ஆகிய அனைத்தும் இன்றியமையாத உணவுப் பொருட்கள் எனக் குறிப்பிட்டு, அவைகளை இன்றியமையாத பொருட்களின் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் கொண்டுவருவதாக சென்னை சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

'உயர்தரக் கல்வியை மதிப்பிட அரசாங்க ஊழியந்தான் உரைகல்லா?'

'கற்றவன் செயலில் சிக்கனம், திறமை, சிறப்பு முதலியவற்றைக் காணலாம்'

தற்கால கல்வி பற்றி பீகார் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

"உயர்தரப் படிப்புதான் வேலையில்லாத் திண்டாட்டப் பெருக்கத்திற்குக் காரணமாக இருக்கிறது என பொதுவாகக் குறைகூறப்பட்டு வருகிறது. வேலை செய்வதை, அரசாங்க அல்லது துணை அரசாங்க அமைப்புக்குள்ளடக்கமானது என்று மட்டுமே கட்டுப்படுத்திக் கொள்வதாக இருந்தால், உயர் படிப்பை நாடுகிற அனைவரையும் அரசாங்க ஊழியத்தில் அமர்த்திக் கொள்வது என்பது, உலகத்தில் உள்ள எந்த ஒரு அரசாங்கத்தாலும் உண்மையில் செயலாற்றக் கூடாததாகும்."

"சிக்கனமாகவும், திறம்படவும், சிறப்பான வழியிலும் ஒரு செயலைச் செய்து முடிக்கும் ஆற்றல், படித்த ஒரு மனிதனுக்கு உண்டு. உண்மை இவ்வாறு இருக்கும்போது, படித்த ஒரு விவசாயி, தச்சன், பொற்கொல்லன் ஆகியோர் கல்வி கற்காதவர் செய்யும் ஒரே தொழிலை, உயர்வாகவும் அழகுபடவும் செய்வதின் மூலம், முன்னேற்றத்தையும் இலாபத்தையும் அதிகப்படியான அளவில் குவிக்கமாட்டார்கள் என, ஏன் கருத வேண்டும்? அரசாங்க ஊழியத்திற்குத் தேவைப்படும் அளவுடன் உயர்தரக் கல்வியின் விரிவைப் பிணைத்துப் போடும் நிலை உருவாகுமானல், அது ஒரு துரதிருஷ்ட நாளேயாகும்."

இவ்வுண்மைகளை, அண்மையில் பாட்னவில் நடைபெற்ற பல்கலைக் கழகத் துணை-வேந்தர்கள் கூட்டத்தில், பீகார் பல்கலைக் கழகத் துணை-வேந்தர் சியாம் நந்தன ஷாபி எம்.பி., அவர்கள், தனது வரவேற்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

வீடிழந்து 10,000 மக்கள் பரிதவிப்பு

மால்டிவ் தீவுகளில் பெரும் புயல்

1,50,000 தென்னை மரங்கள் நாசமாகிவிட்டன

கொழும்பு, ஜன. 28—

மால்டிவ் தீவுகளில், கடந்த 15 தினங்களுக்கு முன் வீசிய கடும்புயலினல் பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் வீடிழந்து தவிக்கவும், 500 பேர்களுக்குமேல் காயம்பட்டு அவதியுறவுமான நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கிடைத்துள்ள அதிகாரபூர்வமான அறிக்கைப்படி, மீன் பிடிக்கும் இடங்களில்தான் அதிகச் சேதம் என்றும், 450 படகுகள் மூழ்கிவிட்டன என்றும் தெரிகிறது. சுமார் 1 லட்சத்து 50-ஆயிரம் தென்னை மரங்களும் வீழ்ந்து நாசமாகிவிட்டதாகவும் தெரிகிறது.

தீவில் உணவுநிலை மிகவும் நெருக்கடியாக உள்ளதாம்.

சேனைத் தலைவர் விவசாயி ஆகிறர்!

இந்தியாவின் சேனதிபதியாகப் பணியாற்றி பதவியிலிருந்து விலகும் ராஜேந்திர சிங்ஜி தனது வாழ்நாளின் மற்ற பகுதியை விவசாயத்தில் ஈடுபடுவதின் மூலம் செலவழிப்பார் என்று தெரிகிறது.

ராஜேந்திர சிங்ஜி சௌராஷ்டிர ராஜப் பிரமுகரின் மருமான். சௌராஷ்டிராவில் உள்ள தனது எஸ்டேட்டில் அவர் சென்று தங்குவார்.

ஒரு ஏகரில் 8,207 - பவுண்டு நெல்!

வடக்கு மலபாரில் அச்சுத நாயர் என்பவர் ஒரு ஏகர் நஞ்செய் நிலத்தில் 8,207 பவுண்டு நெல்லை அறுவடை செய்திருக்கிறர். அவருக்கு 300 ரூபாய் மதிப்புடைய தங்க மெடலும், அத்தாட்சிப் பத்திரமும் முதல் மந்திரி காமராசர் கொடுக்க இருக்கிறர்.

குமாஸ்தா வேலைக்கு 620 - பட்டதாரிகள் மனுச் செய்தனர்

தேர்ந்தெடுக்கப்பட்டோர் 19 பேர்களே!

கர்னூல், ஜன. 27—

ஆந்திரப் பகுதி தபால், தந்தி இலாக்கா அலுவலகத்தில் குமாஸ்தா வேலைக்காக 620 பட்டதாரிகள் மனுச் செய்தனர் என்றும், அவர்களில் 19 நபர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும், அவர்களின் தேர்வு ஏற்கனவேயுள்ள சட்டதிட்டங்களின்படி, அவர்களின் பரீட்சை மார்க்குகளைப் பொறுத்தே நடைபெற்றதாயும், தபால், தந்தி இலாக்கா டைரக்டர் அலுவலகக் குறிப்பொன்று கூறுகிறது.

குழந்தைகளின் உணர்ச்சி எத்தகையது?

குழந்தைகள் திரைப்படக்காட்சி பார்க்கும்போது, அவர்கள் மனதில் எத்தகைய உணர்ச்சி ஏற்படுகிறது என்பதைக் கண்டறிய, இந்தியக் கலாச்சார பிலிம் சங்கம் இரண்டு நிபுணர்களை நியமித்திருக்கிறதாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 29—1—1955 சனி

அரசியல் அவலட்சணங்கள்!

(I)

திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்பது, அங்குள்ள தமிழர்களின் நியாயமான நீண்டகாலத்திய கோரிக்கையாகும். அதை நிறைவேற்றி வைப்பதில் பண்டித நேருவின் காங்கிரசிற்கும் கருத்து கிடையாது; அதுபோலவே, திரு-கொச்சி காங்கிரசிற்கும் விருப்பம் கிடையாது. ஆனால், அதை ஒழிப்பதில் இருதரத்தினருக்கும் கருத்தொற்றுமை இருக்கிறது.

திரு-கொச்சி தமிழ்நாடு காங்கிரஸ், திரு-கொச்சி காங்கிரஸ் கட்சிக்குத் தொடர்பற்ற நிலையில் தன்னை ஒரு தனித்த, அகில இந்தியக் காங்கிரசின் துணை உறுப்பாகக் கொள்ள வேண்டுமென மன்றுடியது; அக்கோரிக்கையை ஒப்ப மறுத்து விட்டது அகில இந்தியக் காங்கிரஸ்.

அப்பொழுது இருந்த திரு-கொச்சி காங்கிரஸ் ஆட்சிக்குக் கொடுத்துவந்த ஒத்துழைப்பை, தி. கொ. த. காங்கிரஸ் திரும்பப் பெற்றுக் கொண்டது. அதன் விளைவாகக் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்து, புதிய தேர்தலும் நடைபெற்றது.

தி. கொ. த. காங்கிரசின் அடிப்படை கோரிக்கையில் உள்ள நியாயத்தை, அத்தேர்தல் முடிவு ஐயத்திற்கிடமின்றி உறுதி செய்தது. அங்குள்ள தமிழ் மக்கள் பெரும்பான்மையினரின் இலட்சியம் தேர்தலில் விளக்கமாக வெளிப்பட்ட பின்னரும்கூட, அதற்கு இணக்கம் தந்து, தி. கொ. தமிழ்நாடு காங்கிரசைக் கூட்டாகக் கொண்டு அமைச்சர் குழுவை உருவாக்க தி. கொ. காங்கிரஸ் கட்சிக்கு நல்லறிவு பிறக்கவில்லை. தி. கொ. தமிழ் மக்களின் முடிவுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டுமே என்ற பெருங்குணம் பண்டித நேருவிடமும் மருந்துக்கும் இல்லாமல் போய்விட்டது. தேர்தல் மூலம், தி. கொ. தமிழர்கள் இறுதியாகப் போதித்த படிப்பினையின் உள்ளடக்கத்தை பண்டிதரும் காணத் தவறிவிட்டார்; அவர் ஏவல்படி ஆடிக் கிடக்கும் தி. கொ. காங்கிரசும் கற்கத் தவறிவிட்டது.

"மக்களாட்சி — மக்களாட்சி என நாங்கள் கூறுவதெல்லாம் வெறும் வெளிப்பகட்டே அல்லாது, மக்கள் குரலுக்கு மதிப்பளித்து நடக்கும் மக்கள் தலைவர்கள் நாங்கள் அல்ல; அப்புனிதமான பெயரை உச்சரித்து, மக்களை ஆட்டிப்படைக்க வந்த அதிகார அரசியல் அவலட்சணங்கள் நாங்கள்" என காங்கிரஸ் தலைவர்கள், தங்கள் நடவடிக்கை மூலம் காட்டிக்கொண்டார்கள்.

அவர்கள்தான் அப்படி என்றால், திரு—கொ. த. காங்கிரஸ் தலைவர்களாவது மக்கள் குரலுக்கு மதிப்பளித்துச் செயலாற்றுகிறவர்களாக இருக்கக் கூடாதா? காங்கிரஸ் தலைவர்கள் போக்கு அங்குள்ள தமிழ் மக்கள் முடிவை அலட்சியப்படுத்துவதாக இருக்கிறது என்றால், அத்தமிழ் மக்கள் ஆதரவைப் பெற்று சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு—கொ. த. காங்கிரஸ் தலைவர்களின் போக்கோ, தங்களிடம் நம்பிக்கை வைத்த அதே தமிழ் மக்களின் முடிவை ஒதுக்கித் தள்ளி வேண்டுமென்றே கேலி செய்வதாக இருக்கிறது.

அகில இந்தியக் காங்கிரசும், அதன் துணை அங்கமாக உள்ள தி.கொ. காங்கிரசும், அங்குள்ள தமிழர் கோரிக்கையை நியாயமற்றது எனக் கூறுவதுடன் மட்டுமின்றி, மக்கள் முடிவுக்கே கட்டுப்பட்டு நடப்பதுதான் மக்களாட்சி முறையின் மேம்பாடு என ஒப்பாமலும் இருந்து வருகின்றன. அத்துடன், அங்குள்ள தமிழர்களின் கோரிக்கையை எல்லாவகையிலும் ஒழித்துக்கட்டவும் சதி செய்த வண்ணமும் உள்ளன.

இவ்வுண்மை, நமக்குத் தெரிந்திருப்பதைக் காட்டிலும் தி.கொ.த.நா. காங்கிரஸ் தலைவர்களுக்கு மிக மிக விளக்கமாகத் தெரிந்தே இருக்கிறது. உண்மை விளக்கமாகத் தெரிந்திருந்தும் கூட, கொக்குத் தலையில் வெண்ணெயை வைத்து, சூரிய வெப்பம்பட்டு அது உருகி கொக்கின் கண்ணில் வழிந்த பிறகு கொக்கை இலகுவாகப் பிடித்துக் கொள்ளலாம் எனத் திட்டமிட்ட அறிவாளியைப் போல, திரு-கொச்சி தமிழ் மக்களின் கோரிக்கையில் வெற்றி காண அகில இந்தியக் காங்கிரசின் உறவுக்கு இன்னமும் காத்துக் கிடக்கிறார்கள்.

தமிழர்களின் இலட்சிய வெற்றிக்குத் தாங்கள் ஏற்கனவே காங்கிரசை நம்பி பெற்றது என்ன என்பதை ஒரு முறைக்குப் பலமுறை உணர்ந்துகொண்ட பிறகும் கூட, காங்கிரசிலிருந்து தங்களைத் துண்டித்துக்கொள்ள அவர்களுக்கு நெஞ்சுரம் ஏற்படவில்லை. உறவு வேண்டாமென அகில இந்திய காங்கிரஸ் இவர்களை விரட்டி விரட்டி அடித்தாலும்கூட, அந்த உறவு எப்படியாவது கிடைக்கப்பெறலாம் என்ற நம்பிக்கையில், அதற்கான போக்கில் அவர்கள் இயங்கி வருகிறார்கள். சென்ற காலத்தில் தாங்கள் பெற்ற படிப்பினையிலிருந்து, அவர்களும் எதையும் மறந்ததாகவும் காணோம்; புதியவற்றைக் கற்றதாகவும் காணோம். எனவே, அவர்கள் போக்கு, அவர்களையும், அதிகார அரசியல் அவலட்சணங்கள் பட்டியலில் சேர்த்துவிடுவதாகவே இருக்கிறது.

பதினொரு திங்களுக்கு முன் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு, வெற்றி பெற்ற திரு—கொ. த. காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களை திரு—கொ. காங்கிரஸ் 'அரசியல் தீண்டாதவர்கள்' எனக் கொண்டு, அவர்களைக் கூட்டு சேர்த்துக் கொண்டு மந்திரி சபையை அமைப்பதில் கருத்துக் கொள்ளாமல் இருந்துவிட்டது.

திரு—கொ. த. காங்கிரஸ் உள்ளிட்ட மற்ற கட்சியினரிடம் அதிகாரம் போய்விடக் கூடாது என்பதற்காக, குறைந்த எண்ணிக்கையுடன் இருந்த ம. சோ. கட்சிக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்து, அதைக் காத்து இரட்சித்து வந்தது திரு—கொ. காங்கிரஸ் கட்சி. இதற்கு அகில இந்திய காங்கிரசின் ஆசீர்வாத பலமும் இருந்து வந்தது. இந்த முறைகெட்ட ஏற்பாட்டை, மக்களாட்சி முறையில் எங்கும் நடைபெறாத 'மகா அற்புதம்' என அரசியல் சூது மதியினர் வாயாரப் புகழ்ந்தனர்.

தேர்தல் நோத்தில் தங்களுடைய இலட்சிய வெற்றிக்காக இவர்கள் மீது நம்பிக்கை வைத்து, இவர்களையே தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பிய தி. கொ. தமிழர்களின் ஒருமனமான முடிவை, தி. கொ. த. கா. தலைவர்கள் மதித்து நடக்கத் தவறிவிட்ட போதிலும், தங்களை வேண்டுமென்று விரட்டியடித்துவிட்டு, எதிர்க் கட்சியை அதிகாரத்தில் ஏற்றி பாதுகாப்பளிக்க முன்வந்த தி. கொ. காங்கிரசிடமும், இதை ஒப்புக்கொண்ட அகில இந்தியக் காங்கிரசிடமும் தி.கொ.த. காங்கிரஸ் தலைவர்களுக்கு இன்னமும் பற்று, பாசம் இருக்கிறது என்றால், அதை என்னென்பது? அவர்களை நம்பிக்கிடப்பதில், தங்கள் கோரிக்கைக்கு என்றைக்காவது வெற்றி கிட்டுமா என்பதை, தி. கொ. தமிழர்கள் தான் முடிவுகட்ட வேண்டும். அவர்கள் பெறும் அரசியல் விழிப்புணர்ச்சியின் தரத்தைப் பொறுத்துத்தான், அவர்கள் இலட்சியத்திற்கு வெற்றி ஏற்படுவதும் இருக்கிறது.

பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடுகள்

ஆப்பிரிக்காவுக்கு மாற்றப்படும்?

கேப்டவுன், ஜன. 25—

பிரிட்டிஷாரின் பாதுகாப்பு நாடுகளாக இருக்கும் ஸ்வாசிலாந்து, பஸாடுலந்து, பெசானுலந்து ஆகியவற்றை தென்னாப்பிரிக்காவிடம் ஒப்படைப்பதுபற்றி, தென்னாப்பிரிக்க சட்டசபையில் வரும் பிப்ரவரி முதல் தேதியில் விவாதிக்கப்படுமாம்.

மத்திய பிரதேசத்தில் எஃகுத் தொழிற்சாலை

ரஷிய நிபுணர்களின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது

புதுடில்லி, ஜன. 26—

இந்தியாவில் எஃகுத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவது பற்றி ஆராய்ந்து செல்ல வந்திருந்த ரஷிய நிபுணர்கள், பத்து லட்சம் டன் உற்பத்தி சக்திகொண்ட எஃகுத் தொழிற்சாலையை மத்தியப் பிரதேசத்தில் அமைக்கலாம் என்று தெரிவித்த யோசனையை இந்திய சர்க்கார் பொதுவாக ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிய வருகிறது. ரஷிய இயந்திரங்கள், தொழில் நுணுக்க உதவி இவற்றுடன் இந்த ஆலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரஷிய நிபுணர்களின் அறிக்கையை இந்தியப் பேரரசு பொதுவாகவே அங்கீகரித்திருப்பதாயும், ரஷிய திட்டத்தை இறுதியாக ஏற்று, ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமுன், இந்தியத் தொழில் நுணுக்கக் குழு ஒன்று ரஷியா சென்று எத்தகைய தொழிற்சாலை இந்தியாவுக்குத் தேவை என்பதை ஆய்ந்தறிந்து தேர்ந்தெடுத்துத் தீர்மானிப்பர் என்றும் தெரிகிறது.

பிறகே இருநாட்டு நிபுணர்களும் கூடிப்பேசி தொழிற்சாலை அமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பார்களாம்.

இந்த தொழிற்சாலைக்கு வேண்டிய இயந்திரங்களையும், தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு வேண்டிய தொழில் நுணுக்கவாதிகளையும் கொடுத்து உதவ ரஷியா சம்மதித்திருக்கிறது என்பது அறிந்ததே. தரப்படும் இயந்திரங்களின் விலையை பல வருடத் தவணைகளாக, இந்தியா திருப்பிக்கொடுக்கலாம்.

தொழிற்சாலையை நடத்துவதற்கு வேண்டிய இந்திய தொழில் நுணுக்கவாதிகளைப் பயிற்றுவிக்கவும் ரஷியா சம்மதித்திருக்கிறது; தொழிற்சாலை நிறுவப்பட்டு, உற்பத்தியும் நடக்கும் நிலையில் இந்திய நிபுணர்களிடம் ஒப்படைக்கும் வரை ஆரம்பகாலத்தில் ஆலையை இயக்குவதற்கும், ரஷியா தனது தொழில் நுணுக்கவாதிகளைத்தந்து உதவும் என்றும் கூறப்படுகிறது.

ரஷிய நிபுணர்கள் கடந்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, ஒரு விரிவான அறிக்கையை இந்திய சர்க்காரிடம் தாக்கல் செய்தனர். அந்த அறிக்கையின் அடிப்படை அம்சங்கள் குறித்து, இந்திய நிபுணர் கமிட்டியுடன் விவாதமும் நடத்தினர்.

எஃகுத் தொழிற்சாலைகள் பற்றி இதுவரை கிடைத்துள்ள அறிக்கைகளைக் காட்டிலும், இந்த ரஷிய அறிக்கை, அதிகமான விவரங்கள் கொண்டதாயிருப்பதாக இந்திய நிபுணர்கள் கருதுகின்றனர்.

திரு-தமிழர் தலைவர்கள் மீதுள்ள வழக்குகள்

மைசூருக்கு மாற்றப்படும்

தலைமை உயர்நீதி மன்றத் தீர்ப்பு

புதுடில்லி, ஜன. 27—

திரு-தமிழக விடுதலைப் போராட்டத்தையொட்டி, திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் மீது பட்டம் சர்க்கார் தொடர்ந்துள்ள வழக்குகள் அனைத்தும், திரு-கொச்சி மாநிலத்திலுள்ள நீதிமன்றங்களினின்றும் பெங்களூரில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று, இந்திய தலைமை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள எழு சட்டசபை உறுப்பினர்களை மட்டுமாவது ஜாமீனில் வெளிவிட வேண்டுமெனக் கோரிச் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், வழக்குகளை தமிழ் அல்லது மலையாளப் பகுதி அல்லாத மைசூர் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றவேண்டியிருப்பதின் அவசியத்தையும் தலைமை உயர்நீதி மன்ற நீதிபதி விளக்கிக் கூறியுள்ளார்.

திருநெல்வேலியில் வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்ற யோசனையை திரு-கொச்சி அட்வகேட்-ஜெனரல் "திருநெல்வேலி தமிழ் பகுதியாகும்; அங்கு வழக்கு விசாரணை நடைபெறுவது வழக்கைப் பாதிக்கும்" என்று கூறி அச்சப்படுவதைக் கொண்டே, வழக்கில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களும், தங்கள் மீதுள்ள வழக்குகள், திரு-கொச்சியில் விசாரிக்கப்படுவதினால் சரியான நியாயம் கிடைக்காது என்று அச்சப்படுவது நியாயம் என்று கொள்ள முடிகிறது. எனவே, இந்த வழக்குகளில் பாரபட்சமற்ற நியாயம் கிடைக்கச் செய்ய, மைசூர் மாநிலத்திற்கு வழக்குகள் மாற்றப்படுவதுதான் சரி எனத் தோன்றுவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாணவர்கள் தேகநிலை படுமோசம்

நால்வரில் ஒருவருக்குக் கண்ணாடி தேவைப்படுகிறது!

குஜராத்தி பல்கலைக் கழகத்தில் நிலைமை

அகமதாபாத், ஜன. 26—

"குஜராத் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் தேகநிலை கடந்த 14 ஆண்டுகளில் எவ்வித முன்னேற்றத்தையும் பெறவில்லை," என்று அண்மையில் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது. பல்கலைக் கழகத்தின் மொத்த மாணவர்களில் நான்கில் ஒரு பங்கினருக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையின் போது இந்த உண்மை தெரிய வந்ததாயும், மாணவர்களின் தேகநிலையில் பெரும் குறைகளிருப்பதாயும், மாணவர்களிடம் தீய சுகாதாரப் பழக்கங்களிருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

நான்கு மாணவர்களில் ஒருவருக்கு கண்ணாடி தேவைப்படுகிறது. மாணவர்களின் உயரத்திற்கேற்ப இருக்க வேண்டிய சராசரி நிறை வெகுவாகக் குறைந்துள்ளது.

அவர்களது மார்பு, விரிந்ததாயிருக்கவில்லை; அவர்கள் நிறைய சுவாசப் பயிற்சிகள் செய்ய வேண்டுமென்பதையே அது குறிப்பிடுகிறது.

சரியான சுகாதாரப் பழக்கங்கள் மாணவர்கட்குச் சொல்லித் தரப்பட வேண்டும் என்றும், தேகப் பயிற்சிப் போட்டிகள் வைப்பதின் மூலம் மாணவர்களிடையே தேகநிலை உயர்வுகாண கழகத்தார் முற்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கை ஆலோசனை கூறியுள்ளது.

பரிசோதிக்கப்பட்ட 4,000 மாணவர்களில் 970 பேர்கள் பெண்களாம்!

கோவாவில் தீவிரமான விடுதலைப் போர்

கோவாவில் விடுதலைப்போராட்டம் இந்தியக் 'குடியரசு தினத்தன்று புதியவேகத்துடன் நடைபெற்றிருக்கிறது.

கோவா—இந்தியா எல்லையின் பல்வேறு முனைகளிலிருந்து தொண்டர்கள் கோவாவிற்குள் நுழைய முயன்றிருக்கின்றனர்.

அறப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்போரில் ஒரு பகுதியினர் ரயில் தண்டவாளத்தில் படுத்துக் கொண்டு ரயில் போகவிடாது தடுத்து நிறுத்தினர் என்று தெரிகிறது.

கோவாவிற்குள் நுழைந்த 27 பேர்களிடம் துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டி 15 பேர்களைக் கைது செய்தனராம் கோவா போலீசார்

பல்வேறு இடங்களிலும் சுதந்திரக்கொடியேற்றப்பட்டு புதிய வேகத்துடன் விடுதலைப் போர் நடைபெற்றதாகத் தெரிகிறது.

இதுவரை சுமார் 200 பேர் கைதாகியுள்ளனராம்.

அரசியலாரின் தொழிலாளர் நல இன்சூரன்ஸ் திட்டம்

37,000 தொழிலாளர்கள் பயனடைவர்

தொழிலாளர் நலனுக்காக சர்க்காரால் கோவையில் துவங்கப்பட்டிருக்கும் தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் 37,000 தொழிலாளர்கள் பயன் அடைய இருக்கின்றனர்.

தொழிலாளர்களுக்கு ஏற்படும் நோய், பலவீனம் ஆகியவைகளைப் போக்கி, போதிய மருத்துவ வசதிகளையும் இத்திட்டத்தின் மூலம் பெற முடியும்.

இதற்கான தனி சட்டம் ஒன்று இந்திய சர்க்காரால் 1948-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

ரூ 400-க்குக் குறைவாக ஊதியம் பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பலனடைவார்கள். தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டம், 1952 பிப்ரவரியில் டில்லியிலும், கான்பூரிலும் துவக்கப்பட்டு அமுலில் இருக்கிறது. 1955 ஜன. 26-ம் நாள் கோவையில் இத்திட்டம் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு ஐந்துவித முக்கிய நன்மைகள் கிடைக்கின்றன.

(1) இலவச மருத்துவ வசதி அனைவருக்கும் அளிக்கப்படும்—மருந்துகள் தருவது, மருத்துவ ஆலோசனைகள், வீட்டிற்கு வந்து பரிசோதனை செய்வது, நிபுணர்கள் வசதி ஆகியவைகள் உண்டு; பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ காலத்திற்கு முன்பும் பின்பும், மருத்துவ உதவி அளிக்கப்படும். இவ்வுதவி அளிப்பது சர்க்காரின் பொறுப்பு; செலவில், நான்கில் ஒருபங்கை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறது.

(2) வேலை காலத்தில் காயம் ஏற்பட்டு எழு நாட்களுக்கு மேல் வேலை செய்ய இயலாது போனால் தொழிலாளி இலவச மருத்துவ உதவி பெறுவதுடன், வருமானத்தில் பாதி தொகையைப் பணமாக—வேலைக்கு போகமுடியாது தன்புறும் காலம் வரை அளிக்கப்படும் நிரந்தரமாக வேலைக்குப் போக முடியாவிட்டால், ஆயுள் பூராவும், 'பென்ஷன்' போன்று பாதி சம்பளம் அளிக்கப்படும்.

(3) காயமுற்ற தொழிலாளி இறந்துபோனால், அவரை நம்பி வாழும் மனைவி, குழந்தைகளுக்கு அரைச் சம்பளம் பணமாக—மாதம் ஒருமுறையோ, இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ அளிக்கப்படும்; மனைவி இல்லாவிட்டால், நெருங்கிய உறவினர்கள் இந்த உதவியைப் பெறுவர்.

(4) ஆண்டுதோறும் 56 நாட்களுக்கு, நோய்கால உதவியாக நோயுற்றபோது தொழிலாளி, பாதி வருவாயைப் பணமாக உதவி பெறுவார்.

(5) இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளிக்கு பிரசவ காலத்திற்கு முன்பும் பின்பும், சமமாக, 12 வார காலத்திற்கு நாள் ஒன்றுக்கு 12 அணு வீதம் உதவி பெற இயலும்.

நோய், மற்றும் பிரசவகால உதவிகள், அத்திட்டம் அமுலான 7 மாதங்களுக்கு பின்னர் நடைமுறைக்கு வரும்.

இந்த தொழிலாளர் நல அரசியலார் இன்சூரன்ஸ் திட்டத்தை மத்திய சர்க்கார், மாநில சர்க்கார், பாராளுமன்றம், மருத்துவர்கள் கழகம், முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய 13 பேர் குழு ஒன்று ஏற்று நடத்துகிறது.

இத்திட்டத்தை அமுல் நடத்த இந்திய உபகண்டம் 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் இப்போது டில்லி, கான்பூர், பம்பாய், நாகபுரி, கோயம்புத்தூர், இந்தூர், குவாலியர், உஜ்ஜெயின், ரட்லம் ஆகிய நகரங்களில் அமுலில் இருக்கிறது.

தொழிலாளர்களுக்குப் பணிபுரியும் டாக்டர்களை சர்க்காரே தேர்ந்தெடுக்கிறது. தொழிலாளர்கள், சர்க்கார் தேர்ந்தெடுத்துள்ள டாக்டர்களில் தங்களுக்குப்பிடித்தமானவரிடம் தங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

பஞ்சாபில், ஆயுர்வேத டாக்டர்களையும் சர்க்கார் தேர்ந்தெடுத்திருக்கிறது. பம்பாயில் 1,000 டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்குச் செலவாகும் பணத்தை, முக்கியமாக முதலாளிகளும், தொழிலாளிகளுமே ஏற்றுக் கொள்கின்றனர். தொழிலாளர்கள், தங்கள் வருமானத்தில் இரண்டு சதவிகிதத்தை அளிக்கிறார்கள்.

இந்தியா எங்குமுள்ள முதலாளிகள், இப்போது, இத்திட்டத்திற்கென ஒரு குறிப்பிட்டதொகையை அளிக்கின்றனர்.

திட்டம் அமுலில் உள்ள பகுதிகளில் முதலாளிகள் 1¼ சதவிகிதமும், மற்ற பகுதிகளில் ¼ சதவிகிதமும் தருகிறார்கள்.

திட்டம் அமுலில் இல்லாத பகுதிகளில் தொழிலாளர் உதவிப் பண நஷ்ட ஈடு சட்டம், பிரசவ உதவிச் சட்டம் இவற்றின் மூலம் அமுல் செய்யப்படுகிறது.

முதல் ஐந்தாண்டு காலத்தில் ஏற்படும் நிர்வாகச் செலவுகளில் மூன்றில் இரண்டு பங்கை, மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்.

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தில், காசநோய் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இந்தத் திட்டம் ஆசியாவில் முதன் முதலாக இந்திய உபகண்டத்தில்தான் அமுல் செய்யப்படுகிறது.

புதிய சேனாதிபதி

புதுடில்லி, ஜன. 27—

தற்போது இந்திய சேனாதிபதியாக இருக்கும் ஜெனரல் மகராஜ் இராஜேந்திர சிங்ஜி ஓய்வு பெறுவதால், அவருக்குப் பதிலாக, இப்போது தெற்கு மண்டல இராணுவத் தளபதியாக இருக்கும் ஸ்ரீ. நாகேஷை நியமிக்க மத்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக பாதுகாப்பு இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

துருக்கி - ஈராக் ஒப்பந்தம்

அரபு நாடுகளின் எதிர்ப்பு

கெய்ரோ, ஜன. 27—

அரபு நாடுகள் எல்லாம், துருக்கி—ஈராக் ஒப்பந்தம் உட்பட எந்த கூட்டு ஒப்பந்தத்திலும் சேரக்கூடாதென அரபு நாடுகளின் பிரதமர்கள் தீர்மானித்திருக்கின்றனராம்.

எல்லா அரபு நாடுகளின் இராணுவங்களும் சேர்ந்த ஒரு கூட்டு இராணுவ அமைப்பு வேண்டுமென்ற எகிப்தின் கோரிக்கையையும் அந்தப் பிரதமர்கள் மாநாடு ஏற்றுக்கொண்டதாம்.

இந்தியா-சீனா ஐந்தாண்டுத் திட்ட உற்பத்தி

சில புள்ளி விபரங்கள்

புதுடில்லி, ஜன. 62—

ஆவடி காங்கிரஸ் மாநாட்டின் போது அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் 'பொருளாதார அறிக்கை' சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளுடைய முதலாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒப்புவமைகள் பற்றிய விபரங்களைத் தந்துள்ளது.

அதில் தரப்பட்டிருக்கிற புள்ளி விபரங்களின்படி, 1953-ம் ஆண்டில், இந்தியாவைக் காட்டிலும் சீனா, நிலக்கரி, உருக்கு, சிமெண்ட். தேனிரும்பு, காகிதம் இவற்றை அதிகமான அளவு உற்பத்தி செய்துள்ளது; ஆனால் இந்தியா, அதிகமான மின்சாரம், இரயில் இவற்றை மட்டும் சீனாவைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்துள்ளதாம்.

இந்திய, சீன நாடுகளின் உற்பத்திப் பொருள்களின் அளவு கீழே தரப்பட்டுள்ளது:—

சீனா:

நிலக்கரி—820 லட்சம் டன்
தேனிரும்பு — 30 லட்சம் டன்
உருக்கு—217 லட்சம் டன்
காகிதம்—4,80,000 டன்
சிமெண்ட் — 473 லட்சம் டன்
மின்சாரம்—13 லட்சம் கி. வா.
ரயில்வே நீளம்—15,342 மைல்
பருத்திநூல்-46 லட்சம் பேல்கள்

இந்தியா:

நிலக்கரி—360 லட்சம் டன்
தேனிரும்பு — 17 லட்சம் டன்
உருக்கு—125 லட்சம் டன்
காகிதம்—1,40,000 டன்
சிமெண்ட்—434 லட்சம் டன்
மின்சாரம்—28 லட்சம் கி. வா.
ரயில்வே நீளம்—35,000 மைல்
பருத்தி நூல்—தெரியவில்லை

சிந்தி மொழியை அரசாங்க மொழியாக்கக் கோரிக்கை

பம்பாய் புலவர்களின் முயற்சி

பம்பாய், ஜன. 27—

"சிந்தி மொழியை இந்தியாவின் மொழிகளில் ஒன்றாக ஒப்புக்கொண்டு அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் அம்மொழியையும் சேர்க்கவேண்டும்,"

என்று இந்திய ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

சிந்தி மொழி வல்லுனர்களின் குழு ஒன்று இக்கோரிக்கையை அனுப்பியுள்ளது. சென்ற ஆகஸ்டு 15-ம் நாள் பம்பாய் ஜெய் இந்த் கல்லூரியில் நடைபெற்ற சிந்தி மொழி பிரதிநிதிகளின் கூட்டமொன்றில் மேற்படி மொழிக் குழு நியமிக்கப்பட்டதாம்.

"அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது நிலவிய சூழ்நிலை காரணமாகவே சிந்தியை இந்தியாவின் மொழிகளில் ஒன்றாக சேர்க்காது விட்டனர்" என்று அக்குழு கூறுகிறது.

அப்போது சிந்துவிலிருந்து வெளியேறி வந்தவர்களின் வெளியேற்றம் பூர்த்தியாகவில்லையாம்; மேலும், புதிதாகக் குடியேறியவர்களின் வாழ்க்கையைப் புனரமைக்கவே அப்போது எல்லா சக்திகளும் செலவிடப்பட்டது.

இந்தியாவில், சிந்தி மொழி பேசும் மக்கள் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசம் கிடையாது; எனவே, சிந்தி மொழி சேர்க்கப்படாமைக்கு இதுவும் ஒரு காரணம் என்று கருதப்படுகிறது.

"தனிப்பட்ட பிரதேசம் ஒன்று இம்முறையில் இல்லை என்பதற்காக தங்கள் கோரிக்கையைப் புறக்கணிக்கக் கூடாது," என்று ஜனாதிபதியை இக்குழு கேட்டுக்கொண்டிருக்கிறது.

வட மொழியும், உருதுவும் இந்தியாவின் பிரதேச மொழிகளல்லவாயினும், அவைகளை அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டிருக்கிறது என்பது சிந்தி மொழியாளர்களால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இப்போது அரசியல் சட்டம் திருத்தப்பட்டுவருவதால் தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற இது நல்ல சமயம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய மொழியென குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் சட்டப் பிரிவில், 'வடமொழியிலிருந்து பல சொற்களை எடுத்துக் கையாளலாம்,' என்று கூறப்பட்டுள்ளது; சிந்தி மொழியினர் இதைச் சுட்டிக்காட்டி, சிந்தி மொழி பிராகிருத மொழியுடன் நெருங்கிய தொடர்பு உடையது என்றும், சிந்தி மொழியை அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டால் இந்தி மொழியின் வளர்ச்சிக்கு நல்ல பயன் ஏற்படுமென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இக்குழுவிற்கு பேராசிரியர் எல். எச். அஜ்வானி என்பவர் தலைவராக இருக்கிறார்.

அரசியல் அமைப்பில் ஒரு மொழி சேர்க்கப்பட்டால், அது, இந்தியாவின் அரசாங்க மொழிகளில் ஒன்றாகும் தகுதியை அடைகிறது.

கழுதை வளர்ப்பதில் கவனம் செலுத்துவர்!

சென்னை, ஜன. 27—

கழுதைகள் வளர்ப்பில் கவனம் செலுத்தவும், அவற்றை அதிகரிக்கவுமான திட்டமொன்றை சென்னை சர்க்கார் கால்நடை அபிவிருத்திக் குழு ஆலோசிக்க இருக்கிறதாம். மலபார் போன்ற மேற்குக் கடற்கரை மாவட்டங்களில் மூட்டைகள் சுமக்கக் கழுதைகள் மிகுதியும் தேவைப்படுகின்றதினாலேயேதான் இத்திட்டம் ஆராயப்பட இருக்கிறதாம்.

ஒவ்வொரு மாநில கால்நடை மருத்துவமனைகளிலும், செயற்கை முறையில் அவை கருதரிக்கச் செய்வது, மேய்ச்சலுக்கான நிலவசதி அபிவிருத்தி செய்தல் போன்றசில திட்டங்களையும் மேற்படி கூட்டம் பரிசீலனை செய்யும் என்று கூறப்படுகிறது.

ஆவடி மாநாட்டிற்காக அரசாங்க ஊழியர்களுக்கு விடுமுறை ஏன்?

அரசியலில் கலந்துகொள்ளக் கூடாது என்ற உத்தரவு என்னவாயிற்று?

சென்னை சர்க்காரின் போக்கிற்கு 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் சூடு

"ஜனவரி திங்கள் 21-ந் தேதியன்று சென்னை சர்க்கார் விடுமுறைவிட்டது, ஞாபக மறதியின் காரணமாகவா, அல்லது ஆழ்ந்த ஆலோசனைக்குப்பின்னர், உணர்ச்சியினால் செய்யப்பட்ட முடிவினாலா என்று தீர்மானிப்பது கடினமாக இருக்கிறது.

ஒரு அரசியல் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியல் மாநாடான காங்கிரஸ் மாநாட்டிற்கு சர்க்கார் ஊழியர்கள் செல்லவேண்டுமென்ற திட்டமான நோக்கத்துடனேயே இந்த விடுமுறை விடப்பட்டுள்ளது.

சென்னை சர்க்கார், காங்கிரஸ் வரவேற்புக் குழுவிற்குக் குறைந்த விலையில் சில மோட்டார்களை விற்றதிலிருந்தே சர்க்கார் எவ்வளவு தூரம் காங்கிரஸ் மாநாட்டிற்கு அனுதாபம் காட்டி இருக்கிறது என்பது புலனாகிறது.

ஒரு சர்க்கார், மக்களின் ஆதரவைப் பெற, தனது நடுநிலைமையிலிருந்து விலகுவது தகாததொரு செயலாகும்.

சென்னை சர்க்கார், ஜனநாயக விரோதமான முறையில், 'ஆசிரியர்கள் அரசியலில் கலந்துகொள்ளக் கூடாது,' என்று தடுத்திருக்கிறது. இதை நினைக்கும்போது, சர்க்கார் விடுமுறை அளித்தது மிகவும் எதிர்ப்புக்குரிய செய்கையாகிறது.

சர்க்கார் ஊழியர்கள் அரசியலினின்றும் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். சர்க்கார் அளித்த விடுமுறையினால், மாநாட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட சர்க்கார் ஊழியர்கள், தங்களிடம் காணப்பட வேண்டிய நடுநிலைமையினின்றும் மாறுபடுமாறு ஊக்குவிக்கப்படாவிட்டாலும், அம்முறைக்கு ஏற்ப நடந்துகொள்ளுமாறு செய்யப்பட்டனர்; காங்கிரஸ் மாநாட்டில் அவர்கள் கலந்துகொண்டதே இதற்கு போதுமான சான்றாகும்.

உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், ஆசிரியர்களும், சர்க்கார் ஊழியர்களும் அரசியல் கட்சிகளில் சேராதவாறு ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது, காங்கிரஸ் அல்லாத கட்சிகளில்தான் சேரக்கூடாது என தடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, பதவியில் அமரும் அளவுக்கு பலம் வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்று உருவாகாதவரை, காங்கிரஸ் சர்க்கார் தவறான பாதை ஒன்றுக்கு வழி காட்டுவது, சாதாரண செய்கை என்று கூட கருதப்படலாம்."

இவ்வாறு, பம்பாயிலிருந்து வெளியாகும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்னும் ஆங்கில தின இதழ் எழுதியிருக்கிறது.

பிறப்பு

தோழர் என். வி. மதிவண்ணன் அவர்களது சகோதரியார் தோழியர் சாரதாம்பாள்-பாலன் அவர்கள் 3—1—55ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம். அவரது மகவுக்கு 'செப்போலியன்' என பெயரிடப்பட்டது.

* * *

காங்கேயம் கழகத் தோழர் கா. வே. முத்தியாலு அவர்கள் துணைவியார் தோழியர் ராசலட்சுமி அவர்கள் 9—1—55ல் ஓர் பெண் மகவைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலம்.

* * *

9—1—55 காலை 4½ மணியளவில் நடிகர் தோழர் டி. என். கருணாகரன் துணைவியார் லட்சுமி அம்மையார் ஓர் பெண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம். குறிப்பு:— தோழியர் லட்சுமி, நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமியின் மைத்துனியாவார்.

* * *

மேல்பள்ளிப்பட்டு தி. மு. கழகத் தோழர் சி. எஸ். வி. வேலன் அவர்களின் துணைவியார் தோழியர் கமலா அம்மையார் 9—1—55 இரவு 2 மணிக்கு ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானார்.

தலைமை உயர் நீதிமன்றத்தின் பெயரால் போலி உத்தரவு

பல வழக்குகளில் ஈடுபட்டுள்ள கேடி தப்பினன்

நாடெங்கிலும் போலீசார் தேடி வருகின்றனராம்

காசி, ஜன. 27—

தலைமை உயர்நீதி மன்றம் அனுப்பியதாக போலி உத்தரவு ஒன்றைத் தயாரித்து, ஆறு மாநில உயர்நீதி மன்றங்களை ஏமாற்றி, ஆந்திரா—கிருஷ்ணா மாவட்டத்திலிருக்கும் சிறை ஒன்றிலிருந்து ஒருவர் தப்பிவிட்டதாகவும், இந்தியாவெங்கணுமுள்ள போலீசார் அவரைத் தேடி வருவதாகவும் தெரிகிறது.

கடந்த 1953-ம் ஆண்டில், விஜயவாடாவில், அந்த 35 வயதுடையவர்—நாட்டின் பல்வேறு பாகங்களில் தான் புரிந்த 35 குற்றங்களுக்காகத் தேடப்பட்டு வந்த அவர், ரயில்வே இலாகாவை ஏமாற்றிய குற்றத்திற்காகச் சிறை பிடிக்கப்பட்டார்.

உடல்நலமில்லை என்று நடித்து, அவர், போலீஸ் வானில் மருத்துவமனை செல்லும்போது, ஓடும் லாரியிலிருந்து தப்பிக் குதித்து ஓடிவிட்டார்; என்றாலும், அவரை மீண்டும் போலீசார் கிருஷ்ணாவில் பிடித்துவிட்டனர்.

அம்மனிதன் கைது செய்யப்பட்ட செய்தி அவனைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டிருந்த எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் வழக்குப் பதிவு செய்யப்படுமுன், தலைமை உயர்நீதி மன்றத்திலிருந்து வந்ததாகச் சொல்லப்படும் ஒரு உத்தரவு ஆறு மாநில உயர்நீதி மன்றங்களுக்கு வந்தன.

அந்த உத்தரவில், உடனே அவனை விடுதலை செய்யவேண்டும் என்றும், அவன் ஏற்கனவே ரூ. 10,000-த்திற்கு ரொக்க ஜாமீன் தந்துவிட்டதாயும், அவன் மீதுள்ள கைது செய்வதற்கான எல்லா 'வாரண்டு'களும் ரத்தாக்கப்பட வேண்டுமென்றும், அவன் மீதுள்ள வழக்குகள் எல்லாம், பின்னர் மொத்தமாகக் காட்டிச் சேர்க்கப்பட்டு நடத்தப்படும் என்றும் கூறப்பட்டதாம்.

அந்த ஆறு உயர்நீதி மன்றங்களும் அப்படியே உத்தரவு பிறப்பித்து விட்டன; எல்லா கைது வாரண்டுகளும் ரத்தாக்கப்பட்டு அவன் விடுதலையும் செய்யப்பட்டான்.

என்றாலும், பின்பு தலைமை உயர்நீதி மன்றம் அவனுக்கு ஜாமீன் தர மறுத்துவிட்டதாகத் தகவல் கிடைத்ததாம்; மீண்டும், தலைமை உயர்நீதி மன்றம் அனுப்பியது போலவே உத்தரவு தயாரித்து சிறையைவிட்டு வெளிவந்து விட்டானும் அவன்.

பின்னர், காசியில் உள்ள போலீசார், தலைமை உயர்நீதி மன்றத்திற்கு, 'இவன் மீதுள்ள வழக்குகள், ஒன்றாக இணைக்கப்பட்டு விட்டனவா?' என்று கேட்டு எழுதியபோதுதான், தலைமை உயர்நீதி மன்றம் அப்படி ஒரு உத்திரவே அனுப்பவில்லை என்பது புலனாயிற்றாம்.

ஏற்கனவே நாட்டில் பல சிறைகளில் வாசம் புரிந்திருக்கிற அந்த மனிதனை நாடெங்கும் உள்ள போலீசார் தேடி வருகிறார்களாம்.

சென்ற கால கனவு?

"இரண்டு நாடுகளிலும் வசிக்கின்ற லட்சோபலட்சம் மக்களும், தங்களது வாழ்நாளில் பெரும்பான்மையான கால அளவில் சேர்ந்தே வாழ்ந்தனர்; இப்போது, நாமே விருப்பப்பட்டு பிரிந்துள்ள போதிலும், நம்மிடையே பொதுப்படையான ஆதாரங்களும் அனுபவமும் இருப்பதால் நமக்குள் நிரந்தரமானதொரு நட்புறவு ஏற்பட வழி ஏற்பட்டிருக்கிறது."

இவ்வாறு, இந்திய ஜனாதிபதி, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்

காதலியைக் கத்தியால் குத்திய இளைஞர்

இராணிப்பேட்டை பஸ்ஸில் சம்பவம்

வேறொருவருக்கு மணம் முடிக்க பெற்றோர் முடிவு செய்ததே காரணமாம்

இராணிப்பேட்டை, ஜன. 27—

தான் காதலித்த ஒரு பெண்ணை, வேறொருவருக்கு மணம் முடிக்க பெற்றோர் ஏற்பாடு செய்தமையால், அந்தப் பெண், பஸ் ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போது குத்திக் காயப்படுத்தினாராம் ஒரு இளைஞர்.

வேலூரைச் சேர்ந்த லட்சுமிபாய் என்ற பெண்ணை, சி. பி சண்முகம் என்ற இளைஞர் காதலித்தார். பெண்ணை தனக்கு மணம் செய்துவைக்குமாறு பெண்ணின் பெற்றோரிடம் கேட்டார் பெற்றோர் மறுத்துவிட்டதுடன், அப்பெண்ணுக்கு சென்னையில் வேறு ஒரு இளைஞனை மணம் செய்துவைக்க முடிவு செய்திருக்கின்றனர். பெண்ணும் அவர் தாயாருமாக, ஆற்காட்டிலிருந்து காஞ்சிபுரத்திற்கு பஸ் ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் லட்சுமியைக் காதலித்த அந்த இளைஞர், வாலாஜாபேட்டை வந்ததும் திடீரென பெண்ணைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தி விட்டாராம்.

பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், அவரைப் பிடித்து வாலாஜாபேட்டை போலீஸ் மூலம், காவலில் வைத்துள்ளாராம்.

முற்றுப்புள்ளி வைப்போம்!

"நம்மிடையே இருந்துவரும் தகராறுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்போம்; நமது பின் சந்ததியாருக்கு இத்தகராறுகளையெல்லாம் நாம் விட்டுச் சொல்லக்கூடாது. இதை இந்தியாவும் உணருமென்று நான் நம்புகிறேன்; உண்மை மனநிலையுடனும், யோக்கியமான பொறுப்புடனும் செயலாற்றுவதைத் தவிர இருநாடுகளுக்கும் வேறு மாற்று வழியில்லை. இவை இல்லாமற்போய்விட்டால், உண்மையான நல்வாழ்வு அடைவது கடினமாகும்."

இவ்வாறு, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல், இந்திய ஜனாதிபதி தமக்களித்த வரவேற்பின்போது கூறினர்.

நல்ல செய்தி தருகிறது
நெற்களஞ்சியம்!

தென்னாட்டு நெற்களஞ்சியம் என புகழப்பட்ட தஞ்சை மாவட்டத்தில், இவ்வாண்டு சம்பா விளைச்சல் பெரும்பான்மையான அளவாக இருக்குமெனக் கூறப்படுகிறது மாவட்டத்திலுள்ள சில பிரதேசங்களில் பயிர்களுக்கு நோய் கண்டிருந்தாலும், இந்த சம்பா அறுவடை மிக திருப்திகரமானதாகவே இருக்கிறதாம். பெரும்பான்மையான இடங்களில், விளைச்சல், சாதாரண மகசூலைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாயிருக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கிறதாம்.

போர் நிறுத்தப் போர்வையில்...!

"ஆபத்துக்களினின்றும் தன்னைப் பாதுகாக்க அவசியமேற்படுகிறபோது இராணுவத்தை உபயோகிக்க அமெரிக்க ஜனாதிபதி கோருகிற விசேட அதிகாரமானது, போர் நிறுத்தப் போர்வையில் ஆசியாவிலும், உலகிலும் சமாதானத்துக்கே உலை வைக்கும் பெரியதோர் சதித்திட்டமாகும்."

"இதற்கு முன் எந்த ஒரு ஜனாதிபதியுமே கேட்டிராத அளவுக்குப் போரைத் துவக்க சகல சர்வாதிகாரமும் கோரப்பட்டிருக்கிறது; ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள அமெரிக்க நாட்டின் பந்தோபஸ்துக்கு சீனா தனது சொந்தத் தீவை விடுவிப்பது ஆபத்தை விளைவிக்கும் என்று சொல்லப்படுவது, மிகவும் வேடிக்கையான ஒன்றாகத்தான் இருக்கிறது."

இவ்வாறு, அமெரிக்க ஜனாதிபதி சட்டசபைகளுக்கு விடுத்துள்ள செய்தி பற்றித் தனது கருத்தைத் தெரிவிக்கும் வகையில் செஞ்சீன செய்தி நிலையம் அறிவித்துள்ளது.

புன்னகை புரிவோம்!

"இந்தியாவுக்கும் நமக்குமிடையே கருத்துவேற்றுமைகள் இருக்கலாம்; ஆனால், இந்தியர்கள் நமது நண்பர்களாக இருப்பதற்கு இப்பிரச்சினைகள் எல்லாம் தடங்கலாக இருப்பது கூடாது. நம்மிடையே நிலவி வருகின்ற அபிப்பிராய பேதங்கள்—கருத்து வேற்றுமைகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு புன்னகை புரிவோம்; நமது வருங்கால சந்ததி நல்வாழ்வெய்த நாம் நண்பர்களாகத் திகழ்வோம்."

கராச்சியிலிருந்து வெளியாகும் 'ஸ்டாண்டர்ட்' எனும் இதழ், காந்தியார்—ஜின்னா இருவரது புகைப்படங்களையும் அடுத்தடுத்துப் போட்டு, அவற்றின் கீழ், மேற்குறிப்பிட்டவாறு எழுதியுள்ளது.

'சீட்டாட்டம் ஆட அல்ல!'

"நாங்கள் என்ன சீட்டாட்டம் ஆடவா அங்கு ('காமன்வெல்த்' மாநாட்டுக்கு) போகிறோம்? நிச்சயமாக பார்மோசா பற்றி விவாதிப்போம்,"

என்று, பண்டித நேரு, லண்டனில் நடைபெறவிருக்கும் 'காமன்வெல்த்' பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள விமான மூலம் பம்பாய்க்குப் புறப்படுகையில் கூறியுள்ளார்.

'பார்மோசாவின் நிலைமை கவலைக்கிடமானதாகவே இருந்து வருகிறது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொங்கல் விழா பொதுக் கூட்டங்கள்

31—1—55ல், விளாப்பாக்கத்தில் தி. மு. கழக 3-ம் ஆண்டு நிறைவு விழாவும், பொங்கல் விழா பொதுக் கூட்டமும் நடைபெறும். அன்று காலை 8 மணிக்கு ஊர்வலமும், 9 மணிக்கு கொடியேற்றலும், சிறாருக்கு இனிப்பு வழங்குதலும், பகல் 12 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தலும், மாலை 5 மணிக்குப் இசை நிகழ்ச்சியும், மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், வி. எஸ். கோவிந்தராசன் சொற்பொழிவாற்றுவர்.

* * *

31—1—55 திங்கள் மாலை 6-30 மணிக்கு, தேவத்தூர் (பழனி வட்டம்) சாவடி முன்பு நடைபெறும். தோழர் எம். எஸ். இராமசாமி பேசுவார்.

திராவிட இளைஞர் மன்றம் துவக்கம்

31—1—55 மாலை 3 மணிக்கு, அரியலூர் பெரிய அரண்மனைத் தெருவிலுள்ள திராவிட இளைஞர் மன்றத்தில் தோழர் அன்பில் தருமலிங்கம் தி. மு. கழகக் கொடியேற்றுவார். தோழர் ஈ. வெ. கி. சம்பத், மன்றத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றுவார். தோழர்கள் நா. தமிழ்முத்து, கு. தங்கவேலு ஆகியோர், மறைந்த வீரர்கள் அழகிரி, பன்னீர்செல்வம் ஆகியோர் உருவப் படங்களைத் திறந்துவைப்பர்.

அன்று மாலை 6 மணிக்கு, ஆயிரக்கால் மண்டபத்திற்கு முன் தோழர் கோ. சிவப்பெருமாள் தலைமையில், 'தற்கால அரசியல் நிலை' எனும் தலைப்பில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அன்பில் தருமலிங்கம் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

முத்தியாலுப்பேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில், 30—1—55 காலை 10 மணிக்கு இராசமன்னார் பாடசாலையில் திருக்குறள் வகுப்பு நடைபெறும் திரு. கி. முருகேசனார் விளக்கவுரையாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

30—1—55 காலை 9 மணிக்கு, 44-வது வட்ட தி.மு.க. பணிமனையில் (2, அரங்கநாதபுரம் தெரு) தோழர் ஏ. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் "திராவிடர் நிலை" என்னும் பொருள் பற்றி பல தோழர்கள் பேசுவர்.

* * *

14-வது வட்ட அழகிரி மன்றத்தில் 30—1—55 ஞாயிறு காலை 10 மணிக்கு தோழர் டி. கே. ராஜாபாதர் தலைமையில் 'சமுதாயம்' எனும் தலைப்பில் பலர் பேசுவர்.

'அழிவு'க்குத் திட்டமிட்டோர் அலறித் துடித்தார்களாம்!

வாஷிங்டன், ஜன. 27—

"வாஷிங்டன் நகரமும், நியூயார்க் நகரமும் இன்றிரவு 12 மணிக்கு அணுகுண்டுவினால் நாசமடையும்"

என்று, டெலிபோனில் யாரோ ஒருவர் கூறியதினால் இரண்டு நகரத்திலும் பீதி நிலவியதாம்.

அமெரிக்க இரகசியப் போலீஸ் இலாகாவிற்கு யாரோ ஒரு நபர் டெலிபோனில் பேசினாராம்; தான் ஒரு வெளிநாட்டு ஏஜெண்டு என்றும், தான் நாட்டை விட்டு வெளியேறப் போவதாகவும், இன்றிரவு 12 மணிக்கு வெடிக்கும்படியாக நியூயார்க்கின் மிகப் பெரிய கட்டிடமான 'எம்பயர் ஸ்டேட்' கட்டிடத்திலும், ரயில்வே நிலையங்களிலும் வாஷிங்டன் நகரில் ஒரு கட்டிடத்திலும் அணுகுண்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் அந்த நபர் கூறினாராம்; பிலடெல்பியா நகரமும் அணுகுண்டுகளினால் நாசமடையும் என்றும் அவர் கூறினாராம்.

இந்த வதந்தி எங்கும் பரவிவிட்டதாம்; சிவில் பாதுகாப்பு நிலையத்தார் எல்லா இடங்களையும் சோதனையிட்டார்களாம்; வதந்தி பரவி மக்கள் பீதியடையவே, 'இச்செய்தி பொய்,' என்று அமெரிக்க ஜனாதிபதியின் பத்திரிகை செயலாளர் மறுப்பு அறிக்கை ஒன்று வெளியிட்டாராம்.

இராசேந்திர பிரசாத் கராச்சி செல்வார்

இந்தியா வந்து திரும்பிய பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் குலாம் முகமது, தான் இந்திய ஜனாதிபதி இராசேந்திர பிரசாத்தை பாகிஸ்தானுக்கு வருமாறு அழைத்ததாகவும், அவர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார்.

தனக்கு சௌகர்யப்பட்டபோது கராச்சிக்கு வருவதாக பிரசாத் கூறினாராம். எப்போது காராச்சிக்கு போவது என்பது நிச்சயிக்கப்படவில்லையாம்.

நாட்டின் ஐந்தாம் படை

நேபாள பிரதமர்மீது குற்றச்சாட்டு

"நேபாளத்தின் பிரதமர் கொய்ராலா ஒரு ஐந்தாம் படை" என்று அவரது கட்சியைச் சேர்ந்த உறுப்பினரான எச். பி. ஜோஷி என்பவர் குறிப்பிட்டார்.

சென்ற வாரம் விவாதத்திற்கு வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை நேபாள சட்டசபை விவாதித்தது. வரவு - செலவு திட்டத்தைத் தாக்கிப் பேசுகையில் ஜோஷி, "இதுபோன்றுதான், சீனாவில் கோமிண்டாங்கட் தனது அழிவுகாலத்தின்போது வரவு - செலவு திட்டங்களைத் தயாரித்தது," என்று குறிப்பிட்டார்.

"இப்போதைய வரவு - செலவு திட்டம் தேசிய அபிவிருத்தியைப் பாதிப்பதாகவும், தேசிய விரோதமான திட்டங்களைக் கொண்டதாகவும் இருக்கிறது," என்றும் அவர் கூறினர்.

சட்டசபை உறுப்பினர்கள் பலர் சர்க்கார் புதிதாக விதித்திருக்கும் 10 சத விகித நில உபரி வரியைத் தாக்கிப் பேசினர்.

"இப்போதைய நிர்வாகம் ஏராளமான பணத்தை விழுங்குகிறது," என்று அனைவருமே குற்றம் சாட்டினார்கள்.

நேபாளத்தில் நிலவும் ஒழுங்கீனங்களையும், பணவீக்கத்தையும், மக்களின் தாழ்ந்த வாழ்க்கை நிலையையும் அவர்கள் கண்டித்தனர் என்று தெரிகிறது.

குஜராத்தி இதழின் ஆசிரியர் தண்டிக்கப்பட்டார்

நடிகை நிரூபராயை பயமுறுத்தினாராம்

பம்பாய், ஜன. 28—

குஜராத்தி மொழியில் வெளியாகும் 'கார்ஜனா' என்ற இதழின் ஆசிரியரான லோவ்ஜி எம். தக்கர் என்பவருக்கு பம்பாய் தலைமை மாகாண மாஜிஸ்திரேட் 15 மாதக் கடுங்காவல் தண்டனையும், ரூ 1,000 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஆறுமாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

இதே வழக்கில் சம்பந்தப்பட்ட நத்வர்லால் பூரலால் என்பவருக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

நிரூபராயின் மீது அவதூறான செய்திகளைப் பிரசுரிப்பதாகப் பயமுறுத்தி தனக்கு ரூ. 5000 தரவேண்டும் என்று அவரது கணவரான கமல்ராயிடம் தாக்கர் கோரினாராம். கமல்ராய் போலீசாரிடம் செய்தியைக் கூறி, தாக்கரை கைது செய்ய ஏற்பாடுகள் செய்தாராம்.

அவரது முன்னேற்பாட்டின்படி குறியிடப்பட்ட கரன்சிநோட்டுகள் சுமார் ரூ. 2000-க்கு தாக்கரிடம் தரப்பட்டு பின்னர், அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாம்.

தீர்ப்பளிக்கையில், நீதிபதி, இதுபோன்ற செய்கைகளில் ஈடுபட்டுள்ளோரைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

முன்னாள் முதலமைச்சர் பத்திரிகையாளராகிறார்

ராஜஸ்தானின் முன்னாள் முதல் அமைச்சரான ஜெய்நாராயண் வியாஸ் இப்போது பத்திரிகை தொழிலில் இறங்கியிருக்கிறார்.

ராஜஸ்தான் செய்தி நிலையம் என்ற புதுசெய்தி நிலையம் ஒன்றை அவர் ஆரம்பித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,